ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

பரமேசுவரனைப் பிரத்யக்ஷமாய்க் கண்டுகளிக்கத்தகுந்தவுபாயத்தைத் தேடிக்கொள்ளவேண்டுமாறு கூறப்பட்டது. நாமரூபமில்லாத பரமேசுவரனை ஸாதநங்களை ஸம்பாதித்துக்கொண்டிருந்தாலும் பிரத்யக்ஷமாய் எப்படிக் காணமுடியும்? இந்திரியங்களால் நாமரூபமுள்ளவைகளைத்தான் ப்ரத்யக்ஷமாகி அறியக்கூடும். இனி ஈசுவரனுக்கு நாமரூபங்களுண்மையிலுண்டா இல்லையா? என்ற வினா நிகழ்கின்றது. இவ்விஷயத்தில் பலர் ஈசுவரனுக்கு நாமரூபங்களும் கல்யாணகுணங்களும்உண்மையாகவே உண்டென்று அபிப்பிராயப்படுகிறார்கள். சிலரோ, நாமரூபங்களும் குணகணங்களும் பகவானிடத்தில் கல்பிதங்களேயொழிய,உண்மையானவைகளல்ல. உபாஸகர்களையும், பக்தர்களையும் அனுக்ரஹித்து அவர்களினிஷ்டபூர்த்தியைச் செய்வதற்காக பகவான் தானே தனக்கு ஸ்வாதீனமான மாயா சக்திமஹிமையால் பல நாமரூபங்களோடு பிரகாசிக்கிறார் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். எந்தெந்த நாமரூபத்தோடு பகவானை ஜனங்கள் பஜனம் பண்ணுகிறார்களோ, அந்தந்த நாமரூபத்துடன் கூடவே பகவான் ஜனங்கள்முன் தோன்றி,அவர்களபீஷ்டத்தைப் பூர்த்திசெய்வதாக நமது சாஸ்திரசித்தாந்தம். ஜனங்களுக்கு ருசிபேதத்தால ஒரே மாவால் செய்யப்பட்ட பலவகை தின்பண்டங்களில் ஆவலுண்டாவதுபோல் பகவானுடைய பலவகைப்பட்ட நாமரூபங்களிலுமாசையேற்படுவது ஸஹஜமானது, எவரெவர்களுக்கு எவ்வகை நாமரூபமமைந்த தெய்வத்தினிடம் பக்தி, விசுவாசம் அமைந்திருக்கின்றதோ அவர்கள் மற்ற தெய்வத்தை இகழ்ச்சிசெய்யாமல் தன் தெய்வத்தினிடம் பக்தி செலுத்தவேண்டும். இதர தெய்வத்தை நிந்திக்கும் தன்மையுள்ளவர்கள் தன் தெய்வத்தின் ஸ்வரூபத்தையுணர்ந்தவர்களாகமாட்டார்கள். பக்தியின் இளம்பருவத்தில்தான் "தன் தெய்வம், என் தெய்வம்" என ஸமயவாதிகள் சண்டைக்குத் தலைப்படுகிறார்கள். பக்தி முதிர்ந்தகாலத்திலோ ஸகல தெய்வத்தினிட்மும் அந்தர்யாமியாய் விளங்கும் பகவான் 'ஒருவரே' என்ற ஸமரஸ சாந்தநிலை ஏற்பட்டுவிடும். சண்டைகளும் இத்துடன் ஒய்ந்துவிடும். ஆகையால் பகவானுடைய நாமரூபங்களில் சண்டையிட்டுக்கொள்ளாமல் அவரைத்தரிசிக்கும் வழியைத் தேடிக்கொள்ளவேண்டும். பகவானைத் தரிசிக்கும் உபாயங்களை உபநிஷத்துக்கள் உரைக்கின்றன. கர்மகாண்டங்களும் அவரைக் காண்பதற்காகவே ஏற்பட்டன. கர்மாக்களையனுஷ்டித்து சித்தசுத்தி ஸம்பாதித்துக்கொள்ளாதவனுக்கு பகவான் பிரத்யக்ஷமாகமாட்டார். ஈசுவரனுடைய பிரத்யக்ஷத்துக்காகச் செய்யப்படும் கர்மாக்களே கர்மயோகமெனப்படும். அவரைத்தரிசிக்கும் அந்தரங்கோபாயமுமுண்டு. அவற்றைக் கொஞ்சம்கொஞ்சமாய் தெரிந்துகொண்டு பகவானைப் பிரத்யக்ஷீகரிக்கும்படி கோருகிறேன். சுபம்.

பத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

விபவ-௵ தை-மீ ௨௯௨

## ஆஸ்திகமத ரஹஸ்யம்.

ஆரியர்களே !

வைதிகர்களாகிய நாமனைவரும் வேதத்தாலருளப்பட்ட மதத்தைக் கைக்கொண்டவர்கள். வேதமோ ஆத்யந்தமில்லாததும் அபௌருஷேயமானது என்று நமதுகொள்கை. ஒரு கிரந்தமாத்யந்தமில்லாமலும் புருஷனால் நிர்மாணம் செய்யப்படாமலுமிருக்கமுடியுமாவென்று ஸந்தேஹப்படக்கூடாது. வேதமென்பது ஒரு கிரந்தவிசேஷத்தையும் குறிக்கிறதில்லை. ஆனால் அது நாம் இகபரஸுகங்களையும், மோக்ஷஸுகத்தையும் அடைந்துய்யும் பொருட்டு விதிவிலக்குவடிவமாயும், ஆத்மஞானவடிவமாயுமுள்ள தத்வக்களஞ்சியமேயாகும். எப்படி மின்சாரசக்தி, ஆகர்ஷணசக்தி இவைகளுக்குறிய விதிகள் அனைத்தும் மேனாட்டு நவீந வைஞ்ஞாநிகர்களால் கண்டுபிடிக்கப்படுமுன்னும் இனி அவர்கள் மறந்துவிடினும், பிரகாசித்துக்கொண்டிருந்தனவோ அதேமாதிரி தர்மாதர்மஞானவிதிகளுமெக்காலத்துமிருப்பவையேயாம். ஆதலின் பிரளயகாலத்திலும ஈசுவான்முதலிய நித்யபதார்த்தங்களைப்போல் வேதங்களும் நாசமுறக்கூடியவைகளல்ல. இவ்விஷயத்தின் ரஹஸ்யத்தை பகவத்பாதாள் ஓரிடத்தில் விசதம்செய்திருக்கிறார்கள். எப்படி இவ்வுலகமெல்லாம் ஆதியற்று ப்ரகாசிக்கின்றனவோ, அப்படியே அதற்குக்காரணமாகிய வேதங்களும் நித்யங்களாகவே ப்ரகாசிக்கும் என்பதில் என்ன ஸந்தேஹம்? இத்தகைய ஆத்மதத்வஞானமேதான் வேதமெனப்படும். இதற்குக் காலநிர்ணயம் இதுகாறுமேற்படவில்லை, இனியுமேற்படமுடியாது. ஆதலால் வேதம் நித்யமென்பதே வைதிகர்களின் ஸித்தாந்தம். நம் முன்னோர்கள் வேதாத்தியயனம்செய்யாமல் சும்மா காலத்தைக்கழிக்க மனங்கொள்ளார்கள். அவர்களுக்கு வேதத்

தில் அன்பும், நம்பிக்கையும் அதிகமாகவுண்டு. தர்க்கம் முதலிய வைகளுக்கு முரண்பட்டிருந்தாலும் அவைகளில் கூறியவற்றை ஆதாவுடனநுஷ்டிப்பதிலேயே நோக்கமுள்ளவர்களாயிருப்பார்கள். வேதத்தில் குதர்க்கமும் செய்யமாட்டார்கள். தற்காலத்திலோ வேதத்தின் நிலைமையையும் அதில் ஜனங்களுக்கிருக்கும் நிலைமையையும் எவ்விதமென்று நாம் எடுத்துக்கூறவேண்டாம். ஆகலால் அனர்த்தங்களனைத்தும் நமக்கேற்படாமலிருக்கவேண்டுமானல் வேதத்தில் நம்பிக்கையையும், அதில் கூறியுள்ள தத்வங்களில் நம்பிக்கையையும், தானடையவேண்டும். இதுதான் நமக்கு க்ஷேமஸாதநமாகிய காரியமாகும். இந்த வேதம் கர்மகாண்டம், ஞானகாண்டம் என இரு பகுதிகளுடையது; கர்மகாண்டம் இஹபரலோகஸுகஸாதநங்களாகிய யாகம் முதலிய கர்மங்களைப் பற்றிக் கூறுகின்றது. கர்மகாண்டத்தின் முக்கியாம்சங்களாகிய வர்ணாச்ரமதர்மங்களை அநுஷ்டிக்காதவர்களுக்கு சித்தம் சுத்தமாகமாட்டாது. சித்தசுத்தியில்லாவிட்டால் ஞானத்தை நாமொருபோதுமடையவேமுடியாது. ஆனல் அக்காண்டத்தில் கூறியிருக்கும் க்ரியைகளனைத்தையும் அநுஷ்டானத்தில் வைத்துக்கொள்ள முடியாவிட்டாலும் நாம் ஜீவித்து ஸுகமாக வாழ்வதற்குக் காரணமாகிய நித்யகர்மாக்களையாவது அநுஷ்டித்தே தீரவேண்டும். ஒருவன் ஒருவேலையுமின்றி யொருபோதுமிருக்கமுடியாது. ஆகவே பிரயோஜனமற்ற லௌகிக காரியங்களையநுஷ்டிப்பதைக் காட்டிலும், வைதிககார்யங்களையநுஷ்டிப்பதுதான் சிரேஷ்டமாகும். இவ்விஷயம் பகவத்கீதையில் வெகு விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. வேதாந்தமென்றும், வேதசிரஸ்ஸென்றும் புகழ்ந்தோதப்பட்ட ஞானகாண்டத்தில்தான் அத்யாத்மதத்வங்களடங்கியிருக்கின்றன. பாதகண்டத்திலிருக்கும் வைதிக தர்சனக்காரர்களனைவரும் வேதாந்தத்தின் பிராமாண்யத்தையொப்புக்கொள்ளவேண்டியவர்களே. ஞானபாகம் அனைத்தும் ஆத்மலக்ஷணம், ஈசுவரலக்ஷணம், ஜீவேசுவரஸம்பந்தம், முக்தியுபாயம், சிருஷ்டிக்ரமம், பிரளயம், பிரபஞ்சதத்வம் முதலியவற்றைக் கூறுவதாகும். கர்மகாண்டமோ நமது ஆசாராநுஷ்டாநுகாரவ்யவகாரங்களனைத்தையும்பற்றிக்கூறுவதாகும். இவ்விருப் பகுதிகளினுண்மைப்பொருளை விளக்குவதே ஷட்தர்சனக்காரர்களின் நோக்கமாகும். இந்த தர்சனங்களின் உட்பிரிவுகள்பார்வைக்கு

பரஸ்பரம் விரோதமுள்ளவைபோற்றோன்றினும் முடிவில் ஒரு ஸித்தாந்தத்தையே பிரதிபாதகம் பண்ணுகிறது. பார்வைக்குப் பரஸ்பரம் விரோதமாகத் தென்படும் இவற்றிற்கெல்லாம் மூலாதாரஸ்தானம் எது? விரிவாய்ப் பிரிந்துகிடக்கும் இம்மதபேதங்களெல்லாம் எந்தப் பொதுவானவிடத்தில் ஒன்றுசேருகிறது என்னும் விஷயத்துக்கு விஸ்தாரமாய் ஸமாதானம் கூற முயலுவோம்.

இவ்வினாவிற்கு ஸமாதானம் கூறுவதற்குமுன் ஸமாதானம் மனதில் எளிதில்ஸ்புரிப்பதற்காக அத்வைதவேதாந்தஸித்தாந்தத்தைப்பிரஸங்கிப்பது அத்யாவசியமாயிருக்கின்றது. இவ்விஷயத்தில் த்வைதிகளுக்கும் விசிஷ்டாத்வைதிகளுக்கும் மனவருத்தமுண்டாகாதவாறு ஸமரஸவழியில் அத்வைதஸித்தாந்தத்தையெடுத்துரைப்பதும் கடினமன்று. ஈசுவரன் பிரபஞ்சத்திற்குள்ளும் வெளியிலுமிருக்கிறானென்றும், ஜீவராசிகளுக்குள்ளேயும் ஈசுவர ஸ்வரூபமிருக்கிறதென்றும் ஒப்புக்கொள்ளாத மதமிப்பாரதகண்டத்திலொன்றுகூட கிடையாது. பரிசுத்தத் தன்மையும், பரிபூர்ணத்தன்மையும் ஆத்மாவினிடத்தில் எற்கனவேயே இருக்கின்றனவென்பதும் வேதாந்திகள் யாவரும் ஒப்பவேண்டியதே. வேதாந்திகளில் சிலர் இந்த பரிபூர்ணத்தன்மை சிலகாலம் ஸங்கோசமடைந்தும், சிலகாலம் விகாஸமடைந்தும் விளங்குகிறதென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். அத்வைதிகளோ அப்பரிபூர்ணத்தன்மை ஜீவர்களுக்கு சுருங்குவதுமில்லை. விரிவதுமில்லையென்றும், ஏதோவொரு உபாதியால் இப்போது மறைந்திருக்கிற்து. மறைக்குமவ்வுபாதியொழிந்துபோகுங்காலத்தில் முன்னிருந்த பரிபூர்ணத்தன்மைப் பிரகாசமுறும் என்றுசொல்கிறார்கள். இதையெடுத்துச்சொல்லும்போது அத்வைதமானது தர்க்கரீதியையனுஸரித்து ஒருவேளை யுக்தி யுக்தமாக விருப்பதாகச் சொல்லக்கூடும். எப்படியானாலும் பலிதார்த்தம் ஒன்றுதானே என்று அவர்களுக்கு ஸமரஸவழியை அறிவிப்போம், ஆத்மாவே ஈசுவரத்தன்மையுடையதென்றும் ஆனாலது பிரகிருதியெனுமக்ஞானதால் பந்தப்பட்டு ஸம்ஸாரியாக உழலுகிறதென்றும். இப்பந்தமொழியும் காலமே அதின் பரிபூர்ணத்தன்மை பிரகாசிக்கும் காலமென்றும் உபநிஷத்துக்களுபதேசிக்கின்றன. பரிபூர்ணத்வம் பிரகாசிக்கும் ஸமயத்தையே முக்தியென்றும் பேரின்பவீடென்றும் பந்தநிவர்த்தியென்றும் பெயரிட்டழைப்பது வழக்கம். இந்த ஜநநமரணபந்தம் பரமேசுவரனின்

திருவருளாலேயேதான் நிவர்த்திக்கவேண்டுமென்றும் அப்பரமே சாநுக்ரஹம் வெகுகாலம் புண்யகர்மங்களையநுஷ்டித்துப்பரிசுத்த மான மனமுடையவர்கள் விஷயத்திலேயே பிரவர்த்திக்குமென்று வேதங்கள் முறையிடுகின்றன. மாசற்ற மனமுடைய மகாபுருஷ னே பகவானுடைய அருளால் பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிக்கிறான். சித்தசுத்தியுள்ளவர்களுக்கு பரமாத்மா தாமே பிரத்யக்ஷமாகிறார். எப்படி ஒருவனுக்கு கிடைசென்று விஷயசுகம் ஏற்படுவது பரமே சுவராதீனமோ அப்படியே மோக்ஷஸுகம் ஏற்படுவதற்கும் வெகுகாலம் செய்தத்தவப்பயனாகிய பரமேசுவரானுக்ரஹம்தான் காரணமாகும், அத்வைத வேதாந்தி மோக்ஷஸுகத்தை இச்சிவ தசையிலேயே அனுபவிக்கிறான். இவன் இந்திரியங்களுக்குப் புலப்படும் பொருள்களுக்கப்பால் ஒன்று இருக்குமாயின் அதை நேரில் அனுபவிக்க விரும்புகிறான். பரமகருணாமூர்த்தியான அப்பரமேசுவரனின் ஸாக்ஷாத்காரமே அம்மகாபுருஷனின் மனக் கோணல்களெல்லாவற்றையும் ஸந்தேகங்களனைத்தையும் கர்ம பாசங்களையும் நாசம்செய்யவல்லமைவாய்ந்தது, இவ்விஷயம்தான்

भिद्यते हृदयग्रन्थिश्छिद्यन्ते सर्वसंशयाः ।
क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन्दृष्टे परावरे ॥

என்ற சுருதிவாக்யத்தாலும் வெளியாகின்றது. இப்படிப்பட்ட பரமேசுவரதர்சனம் இதுவரையில் ஒருவனுக்காவது ஏற்பட்டது மில்லை இனி யாருக்காவது ஏற்படவும் முடியாது என்று சங்கிப் பது ஸரியல்ல "वेदाहमेतं पुरुषं महान्तं" என்ற வேதமேதான் இச் சங்கையை நிவர்த்திக்கவல்ல சிறந்த பிரமாணம். இந்த வசனம் ஒரு ரிஷி கூறுவதுபோல் கூறுகிறது. "நான் ஆத்மாவை பரமே சுவரனாகக்கண்டிருக்கிறேன்." என்று இதுதான் பரிபூர்ண நிலை மையின் சுபாவம். எதாவதொரு ஸம்பிரதாயத்தையாவது, கொ ள்கையையாவது கட்டுப்பாடாக நம்பி எத்தனிப்பதும், கஷ்டப் படுவதும், அத்வைதியின் இயல்பன்று வெறும் நம்பிக்கையில் திருப்தியடையாமல் தற்போதுள்ள நிலைமையிலிருந்துகொண்டு அதினின்றும் பரம்பரையாக பரிபக்வமடைந்து பரமேசுவர ஸ்வரூ பமாய் விளங்குதலுமே அவன் தன்மையாகும். பரமேச்வரஸ்வ ரூபமாய்விளங்கினபின் அவனுடைய நிலைமை எவ்வாறாகுமென்றால் அளவில்லா ஆனந்த ஸாகரத்தில் ஆழ்ந்திருப்பதே அவன் நிலையா

கும். ஆத்மா, அகண்ட ஸச்சிதானந்த ஸ்வரூபமாகிய பரம்பொருளுடன் இரண்டறக்கலக்கும்போது, தனது ஜீவஸ்வரூபம் நாசமுற்று அகண்ட பரிபூர்ணானந்தமாகவே சேஷித்து நிற்கிறது. இதை சிலர் ஜீவனுக்கு ஜீவத்வம்இழந்துநிற்கும்ஆத்மநாசமேதான் மோக்ஷம். அதில் ஸுகம், துக்கம் இவை இரண்டும் மரம் கற்களில்போல் கிடையவே கிடையாது என்று இகழ்ச்சிசெய்வதைக் கண்டிக்கிறோம். ஆனால் இது ஸரியல்ல. ஆனந்தம் ஒரு காலத்திலும் நசிப்பதில்லை. அது நித்யமானது. அது அநித்ய ஜடப்பொருளின் ஸம்யோகவியோகங்களால் நசிக்குந்தன்மை வாய்ந்ததுபோல் தோன்றுகிறது. மோக்ஷகாலத்தில் பிரகாசிக்கும் நிரதிசயானந்தமோ அனுபவவிஷயமாகமாட்டாது. இந்திரியங்களால் பாஹ்யவிஷயஸுகத்தையனுபவிக்கலாமேயன்றி ஆத்மானந்தத்தையனுபவிக்கமுடியாது. ஆதலால் அத்வைதியானவன் பரமேச்வரனோடு இரண்டறக்கலந்து ஸர்வோத்தமானந்தமயமாய் விளங்கிநிற்கிறானென்பது உசிதமே. இவ்விஷயத்துக்கு ஆதாரமாக பல சுருதி ஸ்மிருதி புராணவசனங்களும் பல யுக்திகளுமுண்டானாலும் அவற்றை விரிவுக்கஞ்சி விடுத்தனன். ஆகவே அத்தகைய அந்தமிலா ஸர்வவ்யாபக ஸ்வரூபத்தையடையவேண்டுமாயின் தனித்தனி சரீரமாயும், பிரபஞ்சமாயும் தோன்றும் ஜடப்பொருளின் உருவவேற்றுமைகள் அழிவுற்ற பொய்த்தோற்றமென்றும்,ஜடப்பொருளுக்கு வேறான ஆத்மாவே ஸத்யமானதென்றும், நம்பி அத்வைதமார்க்கத்திலிறங்குவதே முமுக்ஷுக்களுக்கு நிர்பயமார்க்கமாகும். சாஸ்திரங்களனைத்தும் அழியுந்தன்மையுள்ள இப்பிரபஞ்சத்தில் நித்யவஸ்துவாய் உள்ளவர் எவரோ? அடிக்கடி மாறிக்கொண்டிருக்குமிவ்வுலகத்திற்கு ஆதாரமாகிய கூடஸ்தர் எவரோ? ஸகல ஜீவராசிகளும் எந்த ஒரு வஸ்துவின் பிரதிபிம்பங்களோ? அத்தகைய பரமபுருஷனுக்கு ஜீவனோடு அத்யந்தாபேதத்தைப் பிரதிபாதிப்பதோடு பூர்த்தியடைந்துவிடுகின்றன. எந்த சுருதியும் பிரத்யக்ஷம்முதலிய பிரமாணங்களால் கண்டறிய முடியாத ஐக்கியத்தைப் போதிப்பதுதான் யுக்தமேயன்றி பிரத்யக்ஷம் முதலியப் பிரமாணங்களாலும் அறியக்கூடிய தத்வத்தையுணர்த்துவது நிஷ்பிரயோஜனமாகும். ஆகவே பல பொருள்களைச் சத்தியமாய் ஒப்புக்கொள்ளும் துவைதவாதத்தினின்றும் முடிவாக ஒரு பொருள்தானுண்மையானதென்ற அத்வைத

வாதமே யுக்திக்கும் பொருந்தியதாகுமென்பதில் ஆக்ஷேபமில்லை. இவ்விஷயத்தைத்தற்காலத்திய ஜடபதார்த்தசக்திவிமர்சகர்களும் “ஒரு மூலசக்தியின் மூலமாகவே பற்பல சக்திபேதங்கள் உண்டாகவேண்டும்” என்று தீர்மானித்திருக்கிறார்கள். தவிர அத்வைதியானவன் அத்வைதஸித்தாந்தத்துக்கு அநுகூலமாக உபநிஷத்துக்களையே பிரமாணமாக எடுத்துக்காட்டுவான். அதற்குப் பொருளையும் அவைகளின் முக்கியதாத்பர்யத்தை நியாயங்களால் நன்குணர்ந்து வெளியிடுவான். தனது மனதிலிருக்கும் அபிப்பிராயத்துக்குத்தக்கபடி உபநிஷத்துக்களின் அர்த்தத்தை மாற்றிவிட மனங்கொள்ளமாட்டான். ஆகையால் வேதாந்தங்கள் பிரமாதமாக அத்வைதத்தையே கூறுவதால் மற்றைய ஸித்தாந்தங்களும் கடைசியில் இந்த ஸித்தாந்தத்துக்குத்தான் வந்து தீரவேண்டும். ஆகவே இப்பாதகண்டத்திலிருக்கும் மதங்களனைத்தும் ஜீவராசிகளின் ஞானாபிவிருத்திக்காகவேற்பட்ட ஸோபானக்கிரமமென்றேற்படுகின்றது. ஆகவே உலகிலுள்ள ஸகல மதங்களும் நாநாவிதருசியுள்ள ஜனங்கள் யாவரும் தம் தம் புத்திபரிபாகபேதத்துக்கும் பூர்வகர்மவிசேஷத்துக்கும் தக்கபடி பேரின்பவீட்டையுத்தேசித்துச்செய்யும் உபாயங்களே என்பதுதான் நமது சாஸ்திரரஹஸ்யம். இவ்வாறயின் மதங்களுக்குள் இத்தனை பரஸ்பரபேதம் சில கொள்கைகளாலும் நாமதேயங்களாலுமிருப்பானேனென்றால் அவை வெளிப்பார்வைக்குமாத்திரம் பேதமுள்ளவைபோல் புலப்படும். ஒரே உண்மை நாநாவித புத்திபேதமமைந்த ஜனங்களின் பக்வத்துக்குத்தக்கவாறு பலவிதமாகத்தோன்றுவது ஸஹஜம்தான். ஒரே பிரகாசம் பலவித வர்ணக்கண்ணாடிவழியாய் பலவிதமாகக் காணப்படுவதில்லையா? இவ்விஷயத்தை ஸ்ரீகிருஷ்ணனாகத் திருவவதாரம்செய்த ஸர்வேச்வரன், “முத்துமாலையில் சாடு போல் நான் ஒவ்வொரு மதத்திலும் பிரகாசிக்கிறேன்” என்று கூறியிருக்கிறார். இதுவரை அத்வைதஸித்தாந்தத்தினுண்மையை ஸங்கிரஹமாய் எடுத்துக்கூறினோம். இனி ஆஸ்திக நாஸ்திகமதங்களின் ஸ்வரூபத்தையும், அவைகளால் அத்வைதஸித்தாந்தத்துக்கு ஏற்படும் ஆநுகூல்யத்தை எடுத்துரைப்போம்.

பார்.

# காசி ஸம்மேளனம்.

(48-வது பக்கத்தொடர்ச்சி.)

118 நாஹரி வெங்கடேச சாஸ்திரிகள் என்பார் இதே பக்ஷத்தை இன்னும் திக்ஸம்ஹிதா பாஷியப்ரமாணத்தோடு பலப்படுத்தி கூறுகின்றனர். அதிகமாய் 30 வயதான பிறகு விவாகம் செய்துகொள்கிற புருடன் அத்தகைய விதவையை விவாகம் செய்யலாமென்கிறார்.

127. ஸ்ரீ ஜீவனதத்த சர்ம ப்ரம்மசாரி என்பவர் கன்யா விவாகத்தை ஏற்றுக்கொள்வதுடன்

पूर्णषोडशवर्षा स्त्री पूर्णविंशेन सङ्गता ।
शुद्धे गर्भाशये मार्गे रक्ते शुक्रेऽनिले हृदि ॥
वीर्यवन्तं सुतं सूते ततो न्यूनाब्दयोः पुनः ।
रोग्यल्पायुरधन्यो वा गर्भो भवति नैव वा ॥

16-வயது நிரைந்த ஸ்திரீ 20-வயது நிறைந்த புருடனுடன் கலப்பதனால் வீர்யமுள்ள குழந்தையைப் பெறுகிறார்கள் அதற்குக் குறைந்த வயதுள்ளவர்களுக்கு உண்டாகும் ஸந்ததிரோகம் அல்பாயுஸ் முதலியனவால் கவரப்படுகிறது என்று சிகித்ஸாசாஸ்திரம் கூறும் வசனம் கர்பாதானத்தைக் குறிக்கிறதேயல்லாது விவாகத்தை அல்லவென்று கூறுகிறார்.

145. வாராணஸீ வித்யா பரிஷத்து வித்வான்கள்.

ஸ்திரீகளுள் பிராமணஸ்திரீகளுக்கு 8-வது வயதென்பது முக்கியம் மிகவும் கொண்டாடத்தக்கது. 9வது வயது இரண்டாவது படி 10வது வயது 3வது. அதற்குமேல் ரஜஸ் ஏற்படுகிறவரை செய்வது 4வது 11லிருந்து ருதுவாகிற பரியந்தம் செய்வதிலும் மேல் மேல் வயது போவதைக்காட்டிலும் உள்ளடங்கிச்செய்வது சிலாக்யம். சரியான வரன் கிடைத்தால் 8வதுவயதுக்குக்கீழேயும் விவாகம் செய்யலாம். க்ஷத்திரியர்களுக்கு 8, 9 வயதுகளில் விவாகம் செய்வது விசேஷபலனுள்ளது ருதுவாவதற்கு முன் 7வது வயதுக்கு மேலும் விவாகம் செய்யவேண்டுமென்பது எல்லா வருணத்தவர்கட்கும் பொதுவான தர்மம். க்ஷத்திரியஸ்திரீகளுக்கு

காந்தர்வ விவாகமென்பது குணமுள்ள வீர்யமுள்ள வரன் கிடைக்காமலிருந்தால் சாஸ்திரம் ஒற்றுக்கொள்கிறது. த்விஜாதி ஸ்திரீகளுக்கு விவாகமென்பது உபநயன ஸம்ஸ்காரத்தின் ஸ்தானத்திலேற்பட்டதாய் மனு முதலியவர்கள் கூறுகின்றனர். ஆகவே க்ஷத்திரிய ஸ்திரீகளுக்கு 11-வது வயதும், வைச்யஸ்திரீகளுக்கு 12-வது வயதும் முக்கிய காலம் என்றேற்படுகிறது. அக்காலமும் கர்ப்பத்திலிருந்தே எண்ணவேண்டும்,

गर्भदेकादशे राज्ञो गर्भात्तु द्वादशे विशः ।

கர்ப்பத்திலின்று 11 அரசனுக்கும், கர்ப்பத்திலின்று 12 வைசியனுக்கும் என்று கூறுவதுதான் இதற்குப் பிரமாணம். ஆனாலும் இதற்குள் ஸ்திரீ ரஜோவதி ஆய்விடுவாள் என்றிருந்தால் அவ்வயதுக்குமுன்னமேதான் செய்யவேண்டும். அந்தந்த வம்சத்தின் வழக்கம் அவரவர்கட்குத் தெரியும். த்விஜாதிபுருடர்களுக்கு ஸமாவர்த்தனத்திற்குப்பிறகு 48-வயதுவரையிலும் விவாஹத்திற்கு ஸாமான்யகாலம்தான், 30வரை என்பது மிகமுக்கியமானதுதான், 48-லும் முன்முன்வயதுடன் நிறுத்துவது மேலானதுதான். சூத்திரஸ்திரீக்கு 16-வயது முக்கிய காலம்; அதன்பிறகு சக்திக்குத்தகுந்தபடி விவாஹம் செய்யலாம்.

सप्तमाद्वत्सरादूर्ध्वं विवाहः सार्ववर्णिकः ।
अष्टवर्षा भवेद्गौरी नववर्षा तु रोहिणी ॥
दशमे कन्यका प्रोक्ता अत ऊर्ध्वं रजस्वला ।
संप्राप्ते द्वादशे वर्षे यस्तु कन्यां न यच्छति ॥
मासि मासि रजस्तस्याः पिता पिबति शोणितम् ॥

7-வது வயதிற்குப்பிறகு விவாஹம் எல்லா வருணத்தவர்கட்கும் பொது. 8-வயதுள்ளவள் கௌரீ என்றும், 9-வயதுள்ளவள் ரோகிணீ என்றும், 10-வயதுள்ளவள் கன்னிகை என்றும், அதன்பிறகு ரஜஸ்வலே என்றும் கூறப்படுகிறது. 12-வது வயது வந்தபிறதும் எவன் கன்னிகையைக் கொடுக்காமலிருக்கிறானோ அத்தகைய ஸ்திரீக்கு பிரதிமாதமும் ஏற்படும் ரஜஸ்ஸை பிதாபானம் செய்கிறான் என்பதாதி வாக்கியங்களும்

ततः षोडशवर्षीयां भार्यां विन्देत नग्निकाम् ।
वैवाहिको विधिः स्त्रीणां संस्कारो वैदिकः स्मृतः ।
ऋतुत्रयं प्रतीक्ष्यैव कन्या कुर्यात्स्वयंवरम् ॥

பிறகு 16-வயதுள்ள ருதுவாகாத கன்னிகையை பாரியையாய் அடையவேண்டும் என்றும், விவாஹவிதி என்பது ஸ்திரீகளுக்கு வைதிகமான ஸம்ஸ்காரம் என்றும், 3 ருதுக்கள் தாண்டித்தான் கன்னிகை ஸ்வயம்வரம் செய்யவேண்டுமென்றும் பிரமாணங்கள்.

7-வயதுவரை ஸ்திரீகளுக்கு விவாகம் செய்யக்கூடாதென்று வரம்பு வைக்கலாம். புருடர்களுக்கு ஸமாவர்த்தனத்திற்குப் பிறகென்றும் ஸமாவர்த்தனநியமம் இல்லாவிடில்

अनाश्रमी न तिष्ठेत्तु दिनमेकमपि द्विजः ।

த்விஜன் அனுசிரமியாய் ஒருநாள்கூட இருக்கக்கூடாதென்ற வசனப்படியும் ஸமாவர்த்தனமும் 16-வயதிற்குமுன் செய்யக்கூடாதென்றும் ஆகவே விவாஹம் 16-வயதிற்குமுன் செய்யக்கூடாதென்று வரம்பு வைக்கலாமென்றும் பிறகு ஸந்ததி இருப்பது இல்லாதது சரீரதிடம் முதலியதை உத்தேசித்து இத்தனைவயதிற்கு மேல் விவாஹம் கூடாதென்றும் கட்டுப்பாடு செய்துகொள்ளலாம். ரஜோவதியானபிறகு விவாஹம் செய்வது முக்கியமல்ல. பிராமணஸ்திரீகளுக்கு அவ்வித விவாஹம் ஆபத்கல்பம்தான். க்ஷத்திரியாதி ஸ்திரீகளுக்கு கௌணம்.

ருதுஆவதற்குமுன்னுல் வரன் கிடைட்யாவிடில் ருதுமதியின் விவாஹம் ஸம்பவிக்கும். அவளை விவாஹம் செய்வதிலும் பிராயச்சித்தம் அவசியம் வேண்டும் என்பதைக்காட்டுவதற்கே ருதுவான கன்னிகையை வ்ருஷளீ என்று கூறுகிறது.

146. ஸ்ரீ காசி பண்டித ஸபையார்

यावच्चैलं न गृह्णाति यावत् क्रीडति पांसुभिः ।
यावद्दोषं न गृह्णाति तावद्भवति नग्निका ॥

எதுவரை வஸ்திரம் உடுத்திக்கொள்கிறதில்லையோ, எதுவரை புழுதியில் விளையாடுமோ, எதுவரை தோஷம் தெரிந்துகொள்வதில்லையோ அவ்வயதுவரை நக்னிகா என்றும் नग्निकाऽनागतार्तवा ருதுவாகிறவரை நக்னிகா எனப்படுவாள் என்று அமரகாரர் கூறியபடியும், ருதுகாலபரியந்தம் நக்னிகா என்று தெரிவதாலும்

प्रयच्छेन्नग्निकां कन्यामृतुकालभयात्पिता ।

ருதுவாகிவிடுவாளென்றபயத்தால்தகப்பன்நக்னிகையை விவாகம் செய்து கொடுக்கவேண்டும் என்பதாதி வசனங்களாலும் மைதில நிபந்தம், அசௌசெளமுதீ முதலியதிலும் வங்கதேசத்திய ஸ்மார்த்த பட்டாசார்ய நிபந்தனங்களிலும் 2வயது ஆரம்பித்தே விவாகத்தில் ஆசௌச வ்யவஸ்தை காணப்படுவதால் அதிபால்யாவஸ்தை ஆரம்பித்தே விவாகம் செய்வது சாஸ்திர விரோதமல்ல. षडब्दमध्ये नोद्वाह्या 6 வயதின் மத்தியில் விவாகம் செய்யக்கூடாது என்று நிர்ணயஸிந்து முதலியதிற்கூறியிருக்கும் வசனம்.

अष्टमे गर्भाधानाद्वा पञ्चमाब्दात्परं शुभम् ।

कुमारीवरणं दानं मेखलाबन्धनं तथा ॥

பிறந்ததிலிருந்தோ கற்பாதானம் முதற்கொண்டோ 5வது வயதிற்குமேல் குமாரியை வரிப்பதும் தானம் செய்வதும் மௌஞ்ஜி கட்டுவதும் சுபம் என்ற வசனமும் அதற்கு முன் விவாகம் செய்வது முக்கிய கல்பமல்லவென்று மட்டிலும் காட்டுகிறதே தவிர முந்திய வயதை நிந்திக்க வெழுவில்லை. ஆகவே இதுவரை அனுஷ்டானத்திலிருக்கிற பால்ய விவாகம் சாஸ்திரத்திற்கு விரோத முள்ளதல்ல. அதற்குப்பிறந்த ஸந்தானமும் அதர்மஸந்தானம் என்றுமல்ல. ஆகவே ருதுகாலபர்யந்தம் விவாஹ காலம்தான். அதில் 8வயது ஆரம்பித்து 10 வயது வரை பலன் கூறியிருப்பதால் முக்கியவிவாகமாகும். அதற்கு முன்னும் பின்னும் ருதுகாலபரியந்தம் செய்வது கௌணகாலமாகும். அதற்குப்பிறகு ப்ரௌடா விவாகம் செய்வது விருஷளீ என்று சொல்லியிருப்பதால் நிந்திக்கத்தக்கதுதான். அல்லது ஆபத்கல்பம் அதிலும் 3 வருடத்திற்குள் செய்தால் அதில் உண்டாவது தர்மபிரஜை, அதற்குப்பிறகு வ்ருஷளீபதி என்பதாதியால் தர்ம வ்யவகாரத்திற்கு யோக்கியமில்லை என்று வியவஸ்தை அறியத்தக்கது. விருஷளீ என்று சொல்வதால் ப்ரௌடையானவளை விவாகம் செய்யக்கூடாதென்பதையே குறிக்கிறது.

यस्तां विवाहयेत्कन्यां ब्राह्मणो मदमोहितः ।

எந்தப்பிராமணன் மதத்தினால் மயங்கினவனாய் அவளை விவாகம் செய்வானோ என்ற வசனத்தில் பிராமண என்று சொல்லியிருந்தாலும் அது க்ஷத்திரியன் வைசியனையும் குறிக்கும் ஆதல் பற்றியே

यः करोत्येकरात्रेण वृषलीसेवनं द्विजः ।

எந்தத்விஜன் ஒருநாள் விருஷளீஸேவனம் செய்வானோவென்று நிந்திக்குமிடத்தில் த்விஜ என்று குறிப்பிட்டிருப்பது அர்த்தமுள்ளதாகிறது. எப்படியும் ரஜஸுக்குப்பிறகு விவாகம் செய்வது த்விஜவிஷயத்தில் ஆபத்கல்பம்தான். சில க்ஷத்திரியர்களுக்கு காந்தர்வ விவாகமும் ஸ்வயம்வரமும் உண்டென்று ஸம்ஸ்காரரத்னமாலையிற் கூறியிருப்பதாலும் ஸ்வயம்வரமும்

त्रीणि वर्षाण्युदीक्षेत कुमार्यृतुमती सती ।
ऊर्ध्वं तु कालादेतस्मात् विन्देत सदृशं पतिम् ॥

ருதுவாகி குமாரி 3-வருடம் கார்த்திருக்கவேண்டும். அதற்குப் பிறகு அவள் ஸரியான புருடனை அடையவேண்டும் என்ற விதிப்படி நான்குவருடபரியந்தம் கௌணம்தானென்கின்றனர். எவ்விதத்திலும் தானபூர்வமாய் விவாஹம் செய்கிற த்விஜர்களுக்கு ரஜோவதிவிவாஹம் ஆபத்கல்பம்தான். புருடர்களுக்கோவெனில் **केशान्तं चैव षोडश** என்பதனால் ஸமாவர்த்தனம் 16-வயதில் விதித்திருப்பதால் அதுமுதற்கொண்டே விவாஹத்திற்கு தோஷமில்லை. முடிவோவெனில்

चत्वारिंशद्वत्सराणां साष्टानां च परे यदि ।
स्त्रिया वियुज्यते कश्चित् स तु रण्डाश्रमी मतः ॥
अष्टचत्वारिंशदब्दं वयो यावन्नपूर्यते ।
पुत्रभार्यावियुक्तस्य नास्ति यज्ञेऽधिकारिता ॥

48-வயதுக்குப்பிறகு புருடனுக்கு ஸ்திரீவியோகமேற்பட்டால் அவன்ரண்டாச்ரமி எனப்படுவான். அவ்விதம் 48-வயதுமுடிவுக்குள் புத்திரன் பார்யையற்றவனானால் அவனுக்கு யாகத்தில் அதிகாரம் இல்லை என்பதனால்

अनाश्रमी न तिष्ठेत्तु दिनमेकमपि द्विजः ।

என்ற வசனப்படி எற்படும் அனாச்ரமிதோஷம் இவனுக்கு எற்படாது.

पञ्चाशद्वत्सरादूर्ध्वं न कुर्यात्पाणिपीडनम् ।

50-வயதுக்குமேல் விவாஹம் செய்யக்கூடாதென்றமிருக்கிறது. இக்காலத்திலோ ஸ்திரீகளுக்குக் காமத்தின்மேலீட்டால்

12-வது வயதிலிருந்தே ரஜோதர்சனம் அநேகமாய் ஏற்பட்டுவிடுவதால் 12-வயதுக்குள்ளேயே அவசியம் விவாஹம் செய்துவிட வேண்டும். அப்படியே 8-வது வயதிற்குப்பிறகே விவாஹம் ஆரம்பிக்கலாமென்று கட்டுப்படுத்துவதும் கெடுதலில்லை. 8, 9, 10, 11 வயதுமத்தியில் விவாஹகாலவிசேஷத்தை ஏற்படுத்துவது அந்தந்த ஊர் பஞ்சாயத்துஸபைமூலமும் அவரவர்களின் தாய் தந்தை, ஸகோதரர்களின் கோரிக்கைப்படி ஏற்படுத்திக்கொள்வதும் தோஷமில்லை. 8-வயதிற்குமுன்னால் விவாஹம் கூடாதென்று ஸபையால் கட்டுப்படுத்துவது சாஸ்திரவிரோதமல்ல. புருஷர்விஷயத்தில் முன்னமேயே கூறிவிட்டோம். இவ்விதம் விவாஹவிஷயமான 4-கேழ்விகளுக்கு இவ்விதம் பதில் கூறினர். இனி அடுத்த ப்ரச்னங்களை அடுத்து விசாரிப்பாம். சுபம்.

M. N. சுப்பிரமணியசாஸ்திரிகள்.

---

## திருக்கோவிலூர் ஆர்யதர்மாபிவர்த்தனீஸபை 17-வது ஆண்டு விழா வைபவம்.

19—1—29.

சென்ற ஆண்டுகள் போல் இவ்வூரில் பிருஹன்நாயிகாஸமேத ஸ்ரீ வீரட்டஹஸேச்வர ஸ்வாமி முன் மண்டபத்தில் காலை 8 மணிக்கு ௸ சபை துவக்கப்பட்டு வேத உபநிஷத்சாந்தி புரஸ்ஸரமாக மங்களா சரணத்துடனும் பஜனை வைபவத்துடனும் உபக்ரமிக்கப்பட்டது. உள்ளூர் ஸ்ரீமான்களான ஸ்ரீ ராமசந்திர அய்யர், நாராயணஸாமி அய்யர், ஸபைத்தலைவர், உபத்தலைவர், காரியதரிசி முதலானவர்கள் பிர்மஸ்ரீ "அபிநவவ்யாஸ" வாழ்கொடை சுப்பராம கனபாடிகள், சென்னை "பிரஸங்கவர" வே. ஸோமதேவ சர்மா, "க்ருஹ்யக்ஞ" வி. உமாமகேஸ்வர சாஸ்திரிகள், முதலான வெளியூர் வித்வான்களும் பக்கத்துக் கிராமங்களினின்றும் அனேக மஹா ஜனங்களுமாக சுமார் 200நபர்கள் விஜயம்செய்திருந்தனர். பிரும்மஸ்ரீ கனபாடிகளை அக்கிராஸனராகக்கொண்டும் காரியதரிசி அவர்களால் சென்ற வருடத்திய ரிபோர்ட் வாசிக்கப்பட்டும் ஸ்ரீமான் சர்மா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ௸ கன

பாடிகளால் காலை 10 மணிவரையில் ஆரண்யகம் மூன்றாவது ப்ரச்னம் பாஷ்யானுஸாரமாக அத்யத்புதமாக உபன்யஸிக்கப்பட்டது. மாலை 3 மணிக்கு சென்னை உயர்தர நீதி நிபுணரி ஸ்ரீ-உ-வே. N. ஸ்ரீனிவாஸாசாரியார் B. A., B. L., ஹைகோர்ட் வக்கீல் விஜயம் செய்தனர். சபையோர்களால் அன்புடன் வரவேற்கப்பட்டு வைதிக ஸாமரஸ்யம் என்பதைப்பற்றி இரண்டுமணி உபந்யசித்தனர்.

## திருக்கோவிலூர் ப்ராமணஸபை.

19—1—29 மாலை 5-மணிக்கு ப்ரும்மஸ்ரீ தி. ஆராவமுது தாதாசார்யர் B. A. அவர்கள் மஹாராஜாவைபவம் என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு ஸ்ரீமத்ராமாயணத்தில் ஸுக்ரீவமஹாராஜனே மஹாராஜசப்தத்திற்கு ஏற்ற ஆற்றல் பெற்றவன் என அருமையாக ஒருமணி ஆக்ஷேபஸமாதானங்களுடன் வாலிவதத்தைப்பற்றியும் அழகாக உபன்யஸித்தார். தலைவர் அதை ஆமோதித்துப்பேச ஸந்தியாநுஷ்டானத்திற்காக ஸபை கலைந்தது. இரவு 7-மணிக்கு ப்ரும்மஸ்ரீ வெ. ஸோமதேவசர்மாவால் ஸ்ரீமதாசார்யாள் வைதிகர்களை சீர்திருத்த எண்ணி நடத்தியபரீக்ஷயில் முதலில் தேரி, "க்ருஹ்யக்ஞ" என்ற பட்டமும், சால்வைப்பரிசும் பெற்றவர் என அறிமுகஞ்செய்துவைக்கப்பட்ட ப்ரும்மஸ்ரீ உமாமஹேச்வரசாஸ்திரிகளவர்கள் 40-ஸம்ஸ்காரங்கள் யாவை? அதனால் நமக்கு வரும் பயன் யாதென பல வேத மேல்கோள்களையும் லௌகிக உதாஹரணங்களையும் காட்டி அத்புதமாக 1மணி உபன்யஸித்தார். பிறகு தலைவர் பின்னுரைகூற 9-மணிக்கு ஸபை கலைந்தது. இரவு 10-மணிக்கு ஓர் விஷய ஆலோசனைக்கமிட்டி கூடி, மறுநாள் செய்யவேண்டிய தீர்மானங்களைப்பற்றியோசித்தார்கள்.

20—1—29 காலை 8-மணிக்கு வழக்கப்படி பலரும் தங்கள் ஆன்ஹிககார்யங்களை முடித்துக்கொண்டு வைதிககோலத்துடன் ஸபைக்கு வந்தனர். மாணவர்கள் பாராயணம் செய்ய, ஸ்துதி பாடத்திற்குப்பிறகு ப்ரும்மஸ்ரீ சேஷகனபாடிகள் அநுஷ்டானமென்பதைப்பற்றி ½-மணி உபன்யஸித்தார். அபிநவவ்யாஸர் வேதபாஷ்ய உபன்யாஸம் செய்தார்.

மாலை 3-மணிக்குக்கூடி அடியிற்கண்ட தீர்மானங்களைத் தீர்மானித்தனர்.

1. எந்த ஸமாஜத்தாரும் தமது மதக்கொள்கைகள் புராதந ஆசாரங்கள் இவைகளினின்றும் பிரிக்கமுடியாதபடி ஸம்பந்த முடையதென்று கருதும் எந்த விஷயத்திலும் சட்டஸபைகள் பிரவேசிக்கக்கூடாதென இச்சபை எண்ணுகிறது.

இனி ஏற்படக்கூடிய எவ்வித அரசியல் அமைப்பு திட்டத்திலும் எம்மதத்தின் ஆசார ஒழுக்கங்களையும் பா. சட்டஸபைகளும் அரசாங்கமும் பாதிக்கும்படியான காரியம் செய்யத்தகுதியற்றது என நியமம் ஏற்படுத்தவேண்டுமெனவும் இவ்வுரிமையை உறுதிப்படுத்தத் தக்கமுயற்சி செய்யவேண்டும் என்று தீர்மானிக்கிறது. இதை ஸ்ரீமான் வக்கில் T. S. ராமச்சந்திரய்யரவர்கள் ப்ரேரேபித்து ஸ்ரீ சுப்பராமகனபாடிகள் ஆமோதிக்க ஸ்ரீ நடேசய்யர் அநுஸரித்துப்பேச அது ஏகமனதாக நிறைவேறியது.

2. ஸ்ரீ ஹரிவிலாஸ சாரதாவும் டாக்டர் முத்துலெக்ஷிமியும் கொண்டுவரும் விவாகவயது மசோதாக்களையும் ஸம்மதவயது மசோதாவையும் பலமாகக் கண்டிக்கிறது. சட்டமானால் விவாஹாதிகளை ஸம்ஸ்காரமானதென எண்ணும் பிராமணஜாதிகளை அதிலிருந்து விலக்கும்படி ராஜப்பிரதி நிதியை வேண்டுகிறது. இல்லையேல் அச்சட்டத்தை ஸத்யாக்ரஹாதி முறைகளால் எதிர்க்க வேண்டுமென தீர்மானிககிறது.

இதை ஸ்ரீ நாராயணஸ்வாமி அய்யர் (வக்கில் பிரேரேபிக்க ஸ்ரீ உமா மஹேச்வர சாஸ்திரிகளும் ஸோம தேவசர்மாவும் ஆமோதித்துப்பேச ஏகமனதாய் நிறைவேறியது.

3. பிராம்மண ஸஹோதரர்கள் வரதக்ஷிணை முதலிய துராசாரங்களையும் ஊர்வலம் முதலிய ஆடம்பர செலவுகளையும் நீக்கி மற்றவர்கள் மனம் புண்படாதபடி இஜ்ஜாதி முன்னேற்றத்திற்கு வேண்டிய துறையில் வேலைசெய்யும்படி வேண்டுகிறது.

பிரேரேபித்தவர் ஸ்ரீமான் வக்கில் வீரராகவ அய்யரவர்கள் பிரும்மஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரிகளும் கன்னய்யா அவர்களும் ஆமோதித்தனர். இதுவும் நிறைவேறியது.

4. இஜ்ஜில்லாப்பிரதிநிதிகளான சட்டசபை மெம்பர்களை மதவிஷயமான சட்டத்தை எதிர்க்கும்படியும், இல்லையேல் இனி எங்கள் வாக்கை எதிர்பார்க்க முடியாதென அறிவிக்கிறோம்.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRA

வக்கீல் ராமசேஷ அய்யர் பிரேரேபிக்க, ஸ்ரீனிவாஸசாஸ்திரிகளும், ராகவய்யாவர்களும் ஆமோதிக்க அதுவும் நிறைவேறிற்று.

5. இஜ்ஜில்லா பிராம்மணமஹாஸபை விரைவில்கூட்டும்படி மகா-ா-ஸ்ரீகளான V. S. ஸீதாராமய்யர் B.A.,L.T, V. ஜெயராமய்யர் B.A.,L.T, உமாமஹேச்வரசாஸ்திரிகளேயும் கார்யதரிசிகளாக நியமித்து ப்ரும்மஸ்ரீகளான V. T. ராமஸ்வாமி அய்யர் B.A.,B.L. ஸீ. கே. அண்ட் ஸன்ஸ் தலைவரையும் வேண்டுகிறது.

ஸ்ரீ வக்கீல் M. V. குப்புஸாமி அய்யர் அவர்கள் பிரேரேபிக்க, ஸ்ரீ K. சாம்பமூர்த்திசாஸ்திரிகளும், S. ஜெயராமச்சந்திரய்யர் அவர்களும் ஆமோதிக்க, இதுவும் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது.

6. கவர்மெண்ட் பலத்தைக்கொண்டு வைதிகர்களது மதக்கொள்கைகளேயும், ஸமாஜஸம்ப்ரதாயங்களேயும், மாற்றிவிடலாம் என்று பொருள்படும்படி கூறிய நேருரிபோர்டின் வாக்கியங்களே இச்சபை கண்டிக்கிறது. V. S. ஸீதாராமய்யர் அவர்கள் B.A.,L.T இதை பிரேரேபிக்க, K. V. ஸுப்ரமண்யசாஸ்திரிகளும், ஸீதாராமய்யரும் ஆமோதிக்க நிறைவேறிற்று.

7. சட்டசபைகளிலும் உத்தியோகங்களிலும் ஜாதி மதத்தைக்கொண்டு சலுகைகாட்டுவதால் பலவித தீங்குகள் நேரும் என அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்ட தீர்மானிக்கிறது.

ஸ்ரீ ராமசேஷ அய்யர் வக்கீல் பிரேரேபிக்க, உமாமஹேச்வரசாஸ்திரிகளும் ராகவய்யரும் ஆமோதிக்க ஏக மனதாய் நிறைவேறியது.

8. காசி மஹாசபையின் தீர்மானங்களே இச்சபை முழுமனதுடன் ஏற்று கூடியவரை நிறைவேற்றத் தீர்மானிக்கிறது.

9. இவைகளே பத்திரிகைகளுக்கும் அந்தந்த அதிகாரிகளுக்கும் தெரிவிக்க காரியதரிசிக்கு அதிகாரமளிக்கிறது. தலைவரிடமிருந்து இரண்டு தீர்மானங்களும் வர நிறைவேறின.

(தொடரும்)

K. R. சுப்ரமண்யசாஸ்திரி,

காரியதரிசி.